# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1996/47 - 2016 දෙසැම්බර් 09 වැනි සිකුරාදා - 2016.12.09

*1996/47 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டம்**

வட மாகாணத்தின் மாகாண சபையின் உறுப்பினரொருவரின் பதவி வெற்றிடத்தை நிரப்புதல்

வட மாகாணத்தின் மாகாண சபையின் உறுப்பினரொருவர் மரணமெய்தியமை காரணமாக, அம்மாகாண சபையின் உறுப்பாண்மையில் வெற்றிடமொன்று ஏற்பட்டுள்ளதென்று, 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 65 (1) ஆம் பிரிவின் கீழ் வட மாகாணத்தின் மாகாண சபையின் செயலாளர் எனக்கு அறிவித்துள்ளாராதலாலும் ;

அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கெனத் தகவுடைய ஆளொருவரைப் பெயர் குறித்து நியமிக்கும்படி தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் 65(2) ஆம் பிரிவின் கீழ் தகைமையுள்ள ஆளொருவரைப் பெயர் குறிக்குமாறு தேர்தல் ஆணைக்குழுவினால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேற்கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கென திரு. ஆண்டியையா புவனேஸ்வரன் என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளாராதலாலும் ;

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 19 ஆம் திருத்தத்தின் ஏற்பாடுகளுடன் வாசிக்கப்படவேண்டிய 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 65(2) ஆம் பிரிவின் நியதிகளின்படி செயலாற்றி, திரு. ஆண்டியையா புவனேஸ்வரன் என்பவர், அத்தகைய வெற்றிடம் ஏற்பட்டதான முல்லைத்தீவு நிருவாக மாவட்டத்திலிருந்து மேலேயுள்ள மாகாண சபையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென தேர்தல் ஆணைக் குழுவினால் இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

மஹிந்த தேசப்பிரிய, தவிசாளர் - தேர்தல் ஆணைக்குழு
என். ஜே. அபேசேகர, அங்கத்தவர் - தேர்தல் ஆணைக்குழு
எஸ். இரத்னஜீவன் எச். ஹூல், அங்கதத்தவர் - தேர்தல் ஆணைக்குழு

தேர்தல்கள் அலுவலகம்,
இராஜகிரிய,
*2016, திசெம்பர் 08.*

*12-1011*




*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*